## கீழக்கரை நகர்மன்ற 30.04.2020—ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் :1**

கீழக்கரை நகராட்சிக்கு தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள2018—19 ஆம் ஆண்டு 7th SHPC திட்டத்தில் பொதுசுகாதார பயன்பாட்டிற்குரிய மின்கலன் வாகனங்கள் (Battery Operating Vehicle) வாங்கப்பட்டுள்ளது. இந்த மின்கலன் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கும், மின்கலன் வாகனத்தை பேட்டரி சார்ஜ் செய்வதற்கும் 21—வது வார்டு கொந்த கருணை அப்பா தர்ஹா குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைந்துள்ள வளாகத்தில் புதிதாக மின்கலன் வாகனம் நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது. மின்கலன் வாகனங்களுக்கு பேட்டரி சார்ஜ் செய்ய மின்சார வசதிகள் ஏதும் இல்லாததால் மேற்காணும் மின்கலன் வாகனம் நிறுத்தும் இடத்தில் புதிதாக ஒருமுனை மின் இணைப்பு வழங்குவதற்கு அனுமதி கட்டணம் ரூ.2,418/— செலுத்த கோரி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கீழக்கரை உதவி பொறியாளர் அவர்களிடமிருந்து 24.02.2020—ம் தேதி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

மேற்படி புதிய மின் இணைப்பு அனுமதி கட்டணம் ரூ.2,418/— மட்டும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தும் பொருட்டு இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.446/2019/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. 21—வது வார்டு கொந்த கருணை அப்பா தர்ஹா குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைந்துள்ள வளாகத்தில் மின்கலன் வாகனம் நிறுத்துமிடத்தில் புதிதாக ஒரு முனை மின் இணைப்பு வழங்குவதற்குரிய அனுமதி கட்டணம் ரூ.2,418/—ஐ செலுத்துவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.719 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :2</u>**

இந்நகராட்சியின் பொதுமக்களுக்கு முக்கிய அறிவிப்பு விளம்பரம் வில்முரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.10,000/–க்கு 09.04.2020ன்படியான பட்டியல் இந்நகராட்சிக்கு 29.04.2020–ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.10,000/–மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.174/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

வில்முரசு நாளிதழில் விளம்பர கட்டணம் ரூ.10,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.720 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :3</u>**

இராமநாதபுரம் மருத்துவ கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு துணை முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அனைவரையும் வரவேற்று தினமணி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கட்டணம் ரூ.12,200/–க்கு எக்பிரஸ் பப்ளிகேசன்ஸ் (மதுரை) பி.லிட் பட்டியல் எண்.TNI1139331 நாள்.02.03.2020–ன் படியானது இந்நகராட்சிக்கு 22.04.2020–ம் தேதி வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் ரூ.12,600/–மட்டும் வழங்குவதற்கு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.174/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

எக்பிரஸ் பப்ளிகேசன்ஸ் (மதுரை) பி.லிட் விளம்பர கட்டணம் ரூ.12,600/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.721 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :4</u>

இந்நகராட்சி உரக்கிடங்கில் புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைத்து மும்முனை இணைப்பு (3 phase) பெறுவதற்கு சாலை ஓரங்களில் இடையூராக உள்ள கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்களை JCB இயந்திரம் மூலம் அகற்றும் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் இந்நகர் மன்றத்தில் 31.03.2020–ந்தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் JCB இயந்திரம் மூலம் மேற்காணும் பணிகள் செய்வதற்கு வண்டி வாடகை, எரிபொருள், டிரைவர் படி உட்பட விலை குறிப்பிட்டு 16.04.2020–ந் தேதி வரப்பெற்ற கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | ஞானம்பாள் எர்த் மூவர்ஸ்<br>இதம்பாடல் | 1350<br>(Per hour) |
| 2 | கார்த்திக் எர்த் மூவர்ஸ்<br>34/1 மாரியம்மன் கோவில் தெரு,<br>இராமநாதபுரம். | 1450<br>(Per hour) |
| 3 | ஶ்ரீ சென்றாய பெருமாள் எர்த் மூவர்ஸ்<br>ஒட்டப்பட்டி, ஊத்தங்கரை | 1575<br>(Per hour) |

(கோப்பு எண்.175/2020/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

இந்நகராட்சி உரக்கிடங்கில் புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைத்து மும்முனை இணைப்பு (3 phase) பெறுவதற்கு சாலை ஓரங்களில் இடையூராக உள்ள கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்களை JCB இயந்திரம் மூலம் அகற்றும் பணிகள் செய்வதற்கு வாகன வாடகை ஒரு மணி நேரத்திற்கு ரூ.1350/–க்கு (வண்டி வாடகை, எரிபொருள், டிரைவர் படி உட்பட) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஞானம்பாள் எர்த் மூவர்ஸ், இதம்பாடல் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.722 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :5</u>**

கீழக்கரை நகராட்சி 2020–2021–ம் நிதியாண்டிற்கான இவ்வலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு, பணியாளர்களுக்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், ரசீது புத்தகங்கள், வெள்ளை தாள்கள் போன்ற பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 510/சி2/2017)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலகப்பணிகளின் அவசர அவசியத்தின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. உத்தேச செலவினத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.723 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :6</u>**

கீழக்கரை நகராட்சி 2020–2021–ம் நிதியாண்டிற்கான இவ்வலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு, பணியாளர்களுக்கு தேவையான கணினி உபகரணங்கள், டோனர், கீபோர்டு, மவுஸ் போன்ற பொருட்கள் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.510/சி2/2017)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலகப்பணிகளின் அவசர அவசியத்தின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. உத்தேச செலவினத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.724 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :7</u>**

கீழக்கரை நகராட்சி பகுதிகளில் தற்போது பரவி வரும் மிககொடிய வைரஸ் கிருமியான கொரானோ வைரஸிலிருந்து பொதுமக்களை காத்திடவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 5437/ஜே1/2020 நாள் 09.03.2020–ன் படியும் மற்றும் கூடுதல் தலைமை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அவர்களின் நேர்முக கடித எண் 6792/MA.IV(2)/2020-1 நாள் 13.03.2020–ன் படியும் அந்தந்த நகராட்சி நிர்வாகம் அலுவலகம் மூலம் பொதுமக்கள் கூடும் இடஙகளை தீவிரமாக கண்காணித்து கிருமி நாசினி பொருட்கள் தெளித்து வைரஸ் கிருமி பரவாமல் தடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் படி மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் பெற்றுக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 5,00,000/–க்கு ஏற்கெனவே 16.03.2020 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தற்போது கொரானா வைரஸ்நோய் தீவிரமடைந்துள்ளதால் பொதுசுகாதார நலன் கருதி அவசர அவசியமாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி ஆய்வின் போது கீழக்கரை நகர் பகுதியில் தற்போதுள்ள நிலைமையை கருத்தில் கொண்டு வீடுவாரியாக காய்ச்சல் தொற்று இருக்கிறதா என ஆய்வு செய்ய கூடுதலாக 200 மஸ்தூர் பணியாளர்களை நியமித்து அவர்களுக்கு தேவையான மருத்துவ உபகரணஙகள் வழஙகவும் மற்றும் பொதுசுகாதார கிருமி நாசினி பொருட்களை தேவையான அளவு வாஙகி இருப்பில் வைத்து கொள்ளுமாறும் உத்திரவிட்டுள்ளார். பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமிநாசினி பொருட்கள் வாஙகவேண்டியுள்ளதால் ரூ 20,00,000/–க்கு உத்தேச செலவீனம் ஆகும் எனவும் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்புரையை ஏற்று இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண் 195/2020/எச்1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் வாஙகுவதற்கான உத்தேச செலவீனம் ரூ 20,00,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு அஙகீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் பெற்றுக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.725 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :8</u>**

பொதுசுகாதாரம் கீழக்கரை நகராட்சி நகராட்சி பகுதி வார்டு எண் 12–ல் சின்னக்கடை தெரு பகுதியில் பெரியவர் கொரானா தொற்றின் காரணமாக இறந்துவிட்டார். அதன்

காரணமாக அவருடன் நிகழ்வில் கலந்து கொண்டார்கள் 227 எண்ணிக்கை Contact கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிகழ்வில் கடந்த 04.04.2020 அன்று நெருங்கிய உறவினர்கள் என்ற முறையில் 22 நபர்களுக்கும் , உடன் அருகில் இருந்த 5 பேருக்கு 05.04.2020 டெஸ்ட் எடுக்கப்பட்டது. 14.04.2020 அன்று 15 நபர்களுக்கு டெஸ்ட் எடுத்து அனுப்பப்பட்டுள்ளது. இதில் 2 நபர்களுக்கு கொரானா தொற்று உறுதி செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவரின் மகன் அல்லாபிச்சை மற்றும் தயார் ஜமாலியா ராணி ஆகியோரை 108 வாகனம் மூலம் சிவகஙகை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. அதன் காரணமாக 21 வார்டு பகுதிகளிலும் இந்த கொரானா வைரஸ் தொற்றுநோய் முடியும் காலம் வரை கணக்கெடுப்பு பணிகள் மெயின்ரோடு, தெரு பகுதிகள் மற்றும் வீடுகள் தோறும் கிருமிநாசினி தெளிக்கும் பணியினை துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் துணை இயக்குநர் சுகாதார பணிகள் ஆகியோரால் அறிவுறுத்தப்பட்டது. எனவே கிருமி நாசினி, ஸ்பிரேயர் 240 பணியாளர்களுக்கு PPE கிட், மாஸ்க், கிளவுஸ், பிஸ்கட் தண்ணீர் பாட்டில் கணக்கெடுப்பு நோட்புக் மற்றும் ஸ்டேஷனரி போன்ற அத்தியாவசிய பொருட்கள் மீண்டும் வாங்க வேண்டிய தேவை இருப்பதால் ரூ 30 லட்சத்திற்கு உத்தேச செலவு ஆகும் என இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(கோப்பு எண் 195/2020/எச்1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பொதுசுகாதார பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் வாங்குவதற்கான உத்தேச செலவீனம் ரூ 30,00,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதி மற்றும் கொரானா வைரஸ் தடுப்பு நிதி மூலம் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் பெற்றுக்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.726 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/— ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**